# சுவடி ஆற்றுப்படை

அல்ஹாஜ் எஸ்.எச்.எம்.ஜெமீல்

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடி ஆற்றுப்படை

(இரண்டாம் பாகம்)

அல்ஹாஜ் **எஸ்.எச்.எம்.ஜெமீல்** எம்.ஏ.,

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்
வெளியீடு : 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1950 முதல் 1969 வரையிலான**
**இலங்கை முஸ்லிம்களின்**
**நூல் வெளியீடுகள்**

# உள்ளே...


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | சிறப்புரை ................ | 05 |
| | மதிப்புரை ................ | 07 |
| 1. | நூல் தேட்டம் .......... | 13 |
| 2. | 1950-1959 ............. | 18 |
| 3. | 1960-1969 ............. | 39 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUVADI ĀṞṞUPPADAI

(BIBLIOGRAPHY OF BOOKS
BY
SRI LANKAN MUSLIMS)

VOLUME II


| | | |
|---|---|---|
| **Author** | : | Alhaj **S.H.M. Jameel** B.A. (Econ.Sp.); Dip.Ed; M.A., Additional Secretary, Ministry of Cultural & Religious Affairs, Colombo, Sri Lanka |
| **Publishers** | : | Islamic Book Publishing Centre, Sainthamaruthu, Kalmunai |
| **Typesetting** | : | Benfin Enterprises, 18, Kutty Street, Numgambakkam, Madras - 34. ✆ 8270266 |
| **Cover Design** | : | Huna Hussain |
| **Printers** | : | Threeyem Exports, 83, Angappa Naick Street, Madras - 600 001. |
| **First Edition** | : | 1995 May 1 |
| **Price** | : | **Rs.40/-** |


இலங்கையின் முதலாவது **'அல்லாமா'** பட்டமளித்துக்
கௌரவிக்கப்பட்ட பேராசிரியர்

அல்ஹாஜ் கலாசூரி **மஹ்மூத் முகம்மது உவைஸ்**

**அவர்களின்**

# சிறப்புரை

ஆற்றுப்படுத்தல் என்பது வழிச் செலுத்தலாம். வழிப்படுத்துதல் என்றும் பொருள்படும். ஆற்றுப்படை என்பது அதிலிருந்து பெறப்பட்டதாகும். ஆற்றுப்படை ஓர் இலக்கிய வடிவம். பிரபந்தம் என்றும் வழங்கப்படும். தமிழில் தோன்றிய இலக்கிய வடிவங்களுள் தொன்மை வாய்ந்தது ஆற்றுப்படையாகும். தமிழ் இலக்கிய வகைக ளுள் மிக்க சிறப்புடையதாகக் கருதப்படுவது ஆற்றுப் படை. ஏனைய இலக்கிய வகைகளுக்கு இல்லாத சிறப்பு ஆற்றுப்படை இலக்கியத்துக்குண்டு. தமிழ் இலக்கியங்க ளுள் சங்கச்சான்றோரால் போற்றி வளர்க்கப்பட்ட ஓர் இலக்கிய வகை ஆற்றுப்படை எனலாம்.

புரவலன் ஒருவனிடம் பரிசில் பெற்று வரும் ஓர் இரவலன் பரிசில் பெற விரும்பும் அதே சமயம் வறுமை யில் வாடும் ஒருவனை தனக்குப் பரிசில் வழங்கிய அந்தப் புரவலனிடம் வழிப்படுத்துவதையே - ஆற்றுப்படுத்துவ தையே ஆற்றுப்படை இலக்கிய வடிவம் கொண்டிருக்கும். ஒவ்வொரு ஆற்றுப்படையும் அவ்வாற்றுப்படையில் ஆற் றுப்படுத்தப்படுபவர் பெயரினால் அழைக்கப்படுகிறது. பாணர், கூத்தர், பொருநர், புலவர் என்போர் ஆற்றுப் படுத்தப்பட்டால் அப்பெயர்களால் அந்த ஆற்றுப்படை அழைக்கப்படும். திருமுருகாற்றுப்படை முருகக் கடவுளி டத்து ஆற்றுப்படுத்தப்படுவது. ஆற்றுப்படுத்தப்படும் இடத்தாலும் ஆற்றுப்படை நூல்கள் அழைக்கப்படுகின் றன. வித்துவான் வா.குலாம் காதிறு நாவலரால் இயற்றப் பெற்ற ஆற்றுப்படை, மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராற்றுப்படை என வழங்கப்படுவதைக் காணலாம். திருமக்கமாநகருக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஆற்றுப்படை திருமக்கா ஆற்றுப்படை என வழங்குகிறது.

சுவடி ஆற்றுப்படை தனித்தன்மை வாய்ந்தது. சுவடிக் காப்பகம் அல்லது ஆவணக் காப்பகம் என்பது இலங்கையரால் எழுதப் பெற்ற நூல்களை - கை ஏட்டுப் பிரதிகள், அச்சியற்றப்பட்ட பிரதிகள் முதலியவற்றை எதிர்காலத்தில் பயன்படுத்தக் கூடிய வகையில் பாதுகாப்பாக வைக்கப்படும் ஒரு வகையான நூல் நிலையமே. அத்தகைய அரசின் ஆவணக் காப்பகத்துக்குச் சென்று ஆய்வினை மேற்கொண்டு பல அரிய தமிழ், அறபுத்தமிழ் நூல்களைக் கண்டெடுத்த ஓர் ஆய்வாளர் அத்தகைய ஆர்வம் உடைய மற்றொருவரை அங்குச் சென்று ஆய்வினை மேற்கொள்ளுமாறு தூண்டும் வகையிலே இந்த நூல் அமைந்துள்ளது. செய்யுள் வடிவாக இந்நூல் அமையவில்லை எனினும் பயனுடைய அரிய விவரங்கள் பலவற்றை தன்னிடத்தே கொண்டு விளங்குகிறது இந்தச் சுவடி ஆற்றுப்படை.

பயனுள்ள அருமையான சுவடிகளைப் பற்றி அறிய விரும்புவோருக்கு ஒரு வழிகாட்டியாக இந்நூல் அமையும் என்பதனாலேயே ஆய்வாளர் அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் இந்நூலுக்கு சுவடி ஆற்றுப்படை எனப் பெயரிட்டிருக்கலாம். பண்டைய இஸ்லாமிய இலக்கியங்களைப் பற்றி அறிய விரும்பும் ஆர்வலர்க்கும், ஆய்வாளர்க்கும் இந்நூல் ஒரு கை நூலாக அமைய வேண்டும் என்னும் விழுமிய நோக்கத்துடனேயே இந்நூல் - சுவடி ஆற்றுப்படை - தயாரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் இந்த அரிய முயற்சி பல வழிகளிலும் பயன்தரவல்லது என்பது திண்ணம். அல்ஹாஜ் ஜெமீல் அவர்களின் இவ்வரும் பணி வளர்ந்தோங்க எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறேன். வளர்க அவர் தொண்டு. வாழ்க தமிழ் மொழி.

**ம.முகம்மது உவைஸ்**

'மர்கஸி',
ஹேனமுல்லை,
பாணந்துறை.



கொழும்பு பொது நூலகப் பிரதி நூலகராகவும், தேசிய நூலக சேவைகள் சபையின் உதவிப் பணிப்பாளராகவும், இலங்கை நூலகச் சங்கத்தின் தலைவராகவும் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றி நூலகத்துறையில் அதிஉயர் அனுபவம் பெற்றவரும்; தற்போது இலங்கை இஸ்லாமிய நிலைய கௌரவப் பணிப்பாளராகக் கடமையாற்றுபவருமான

**அல்ஹாஜ் எஸ்.எம்.கமால்தீன்** அவர்களின்

# மதிப்புரை

இந்நாட்டின் முன்னணிக் கல்விமான்களுள் ஒருவரும், சிறந்த நிர்வாகியும், எனது அரிய இலக்கிய நண்பர்களுள் ஒருவருமாகிய ஜனாப். எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்கள் கல்வித் துறையில் பரந்துபட்ட நீண்டகால அனுபவமிக்கவராவார். அவரது கல்விச் சேவைக் காலம் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையிலான தொடர்புடையதாக அமைந்திருந்தது. தற்போதும் கூட கலாச்சார, சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் என்ற வகையில் கல்வித் துறையிலும், இஸ்லாமிய அறிவேடுகளின் வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடுள்ளவராவார்.

கலாச்சார, சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளரென்ற வகையில் அவ்வமைச்சின் கடமைப்பளுவினிடையிலும், ஜனாப் ஜெமீல் இஸ்லாமிய இலக்கியத் துறையில் ஆற்றிவரும் பணி தனிச்சிறப்புடையதாகும்.

இவ்வகையில், ஜனாப் ஜெமீல் அவர்களின் கணிசமான அளவிலான எழுத்துப் பணியையும், இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தின் மூலம் அவர் ஆற்றிவரும் அரிய சேவையினையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

நூலகவியற்றுறையில் ஈடுபட்டுள்ள எனக்கு இலங்கையில் வெளிவந்துள்ள இஸ்லாமிய இலக்கிய நூல்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களால் எழுதப்பட்ட ஏனைய நூல்களையும் பட்டியல் படுத்த வேண்டுமென்ற எண்ணம் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. இந்த வகையில் ஓர் ஆரம்ப முயற்சியாக இலங்கையில் 1979ஆம் ஆண்டில் நடைபெற்ற நான்காவது இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டின் போது ஒரு சில தேர்ந்த நூல்களைக் கொண்ட சிறிய நூற்பட்டியலொன்றை பேருவளை, ஜாமியா நளீமியாவின் சார்பில் வெளியிட்டேன். மேலும் என்னிடம் நூலகவியற்றுறையிலான பாடநெறியைப் பயிலும் சில முஸ்லிம் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாகப் பேராசிரியர் அல்லாமா எம்.எம். உவைஸ், கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி, எஸ்.எச்.எம்.ஜெமீல், எம்.எம்.எம்.மஹ்ரூப், சி.எம்.ஏ. அமீன், ஏ.எம்.சமீம் போன்றவர்களுடைய நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றுக்கான பட்டியலாக்கத்தை பயிற்சிநெறியில் ஓர் அம்சமாகக் கொள்ள வைத்துள்ளேன்.

இதேவேளையில், இஸ்லாமிய இலக்கிய ஆக்கங்களுக்கான முழுமையானதொரு பட்டியலைத் தயாரிக்கும் பாரிய பணியை மேற்கொள்ள யார் முன்வருவாரென நான் ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன். இவ்வகையில் தற்போது ஜனாப் ஜெமீல் அவர்களின் ஆர்வமிக்க ஈடுபாட்டினைக் கண்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

நெடுங்காலமாகத் தொலைவில் கிழக்கேயுள்ள சாய்ந்தமருதுவில் எவ்வித ஆரவாரமுமின்றி அமைதியாக ஜனாப் ஜெமீல் ஆற்றிவந்துள்ள அரியதொரு பணியின் பரப்பை அவரது முன்னுரையின் வாயிலாகவே தற்போது அறிந்து மிகுந்த வியப்படைந்தேன்.

இப்பணியைப் பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார்:

''மிக நீண்டகாலமாக என்னிடம் ஒரு பழக்கம் இருந்து வருகிறது. ஏதாவதொரு நூல் என் கைவசம் கிடைத்தவுடன் அதனை வாசிப்பதற்கு முன்பாகவே அதற்குரிய விவரண அட்டையை (CATALOGUE CARD) தயாரித்தலே அதுவாகும். காலக்கிரமத்தில் இவை நூற்றுக்கணக்கில் சேர்ந்துவிட்டன.''



ஜனாப் ஜெமீல் அவர்கள் செய்து வருவது போன்று தாம் படிக்கும் நூல்களுக்கான விவரண அட்டைகளைச் சேகரித்துவரும் ஒரு முஸ்லிமை இந்நாட்டில் நானறிந்த வரையில் இதுவரை கண்டதில்லை! இந்த மகத்தான பணிக்காக நான் அவரைப் பெரிதும் பாராட்டுகிறேன். இம்முயற்சியில் அவரோடு ஒத்துழைத்த அனைவரும் எமது பாராட்டுக்குரியவராவர்.

நூற் பட்டியல்களின் முக்கியத்துவத்தைப் பற்றி இங்கு நான் விரிவாகக் கூற வேண்டியதில்லை. அறிவுத் தேட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும் இவற்றின் இன்றியமையாத் தன்மையை நன்குணர்வர். பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர் முதல் பல்கலைக்கழக மட்டத்தில் பயில்வோரும், ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டுள்ளோரும், பொது வாசகரும் கூட இப்பட்டியல்களின் மூலம் தாம் நாடிச் செல்லும் அறிவுத் துறைக்கு ஆற்றுப்படுத்தப்படுவர். நூலகங்களில் இயங்கும் உசாத்துணைப் பிரிவுகள் இந்நூற் பட்டியல்களின் மூலமே பாவனையாளர்களுக்குச் சிறந்த சேவையைப் புரிய முடிகிறது.

இலங்கை முஸ்லிம்களின் ஆக்கங்களைப் பற்றிய தகவல்களைப் பெறுவது மிகவும் சிரமமானதொரு காரியமாகும். அதுவும் காலத்தால் முற்பட்ட நூல்களைப் பற்றிய தகவல் பெறுவது அரிதான காரியமாகும். இந்நிலையில் நாட்டில்வெளியாகும் நூல்களைப் பற்றிய முழுமையான தகவல்களைத் தேடிக் கொள்வதற்கான ஒரே மார்க்கம் இலங்கைத் தேசிய நூலகத்தினால் வெளியிடப்படும் இலங்கைத் தேசிய நூற் பட்டியலாகும்.

இலங்கையில் வெளியாகும் நூல்களைப் பதிவு செய்யும் ''அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டம்'' 1885ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1976ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. இதன்படிக்கு இலங்கையில் நூல்களை அச்சிடுவோர் தாம் வெளியிடும் ஒவ்வொரு நூலினதும் ஐந்து பிரதிகளைப் பதிவுக்காகத் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இந்நூல்கள் தேசிய அரும்பொருட்சாலை, பேராதனைப் பல்கலைக் கழகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகம் ஆகியவற்றுக்கு வைப்பிற்காக வழங்கப்படும்.

இலங்கையில் நூல் வெளியீடு நீண்டகால வரலாற்றைக் கொண்டிருந்த போதிலும் 1963ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட நூல்களே தேசிய நூற் பட்டியலில் பதிவாகியுள்ளன. இதற்கு முற்பட்ட நூல்களுக்கான பட்டியலைத் தயாரிப்பதற்குத் தேசிய நூலகம் தற்போது திட்டமிட்டுள்ளது. இதற்காகத் தேசிய ஆவணக் காப்பகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உதவியைப் பெற்று இந்நூற் பட்டியலைத் தயாரிக்கவுள்ளது.

எனவே நூல்களை வெளியிடும்போது எமது முஸ்லிம் எழுத்தாளர்கள் தமது நூல்களின் பிரதிகளைத் தேசிய ஆவணக் காப்பகத்தில் வைப்பிற்காகக் கொடுத்துதவுவது சட்டப் படிக்கு அத்தியாவசியமாகும். அவ்வாறு கொடுக்கப்படும் நூல்களுள் ஒன்று தேசிய நூலகத்திற்கு வைப்பிற்காக அனுப்பப்படும். இந்நூல்களினடியாகவே தேசிய நூற் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. இந்நூற் பட்டியலில் நூல்களின் முழு விபரங்களும் பதிவாகின்றன. எமது எழுத்தாளர்களின் படைப்புக்கள் நிரந்தரப் பாதுகாப்பைப் பெறச் செய்வதற்கு இதுவே சிறந்த வழியாகும். மேலும் தேசிய நூற் பட்டியல் மூலம் எழுத்தாளர்கள் தமது படைப்புக்களைத் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அறிவுலகின் கவனத்திற்குக் கொண்டு வர முடியும்.

அத்தோடு முஸ்லிம் எழுத்தாளர்கள் தமது படைப்புகளுக்கு இலங்கைத் தேசிய நூலகம் இலவசமாக வழங்கும் ஐ.எஸ்.பி.என். (ISBN) இலக்கத்தைப் பெற்று அதனைத் தமது நூலில் பொறித்துக் கொள்வது பயன்மிக்கதாகும். இதன்படி நூல்களுக்கான சர்வதேச நியம இலக்கம் ஒவ்வொரு நூலுக்கும் தனித்துவமானதோர் இலக்கமாயிருக்கும். அச்சிடப்படும் ஒவ்வொரு நூலினையும் சர்வதேச ரீதியில் இனங்காண உதவுவதே இவ்விலக்கத்தின் நோக்கமாகும். வெளியீட்டாளர்கள், விநியோகஸ்தர்கள், நூலகங்கள், வாசகர்கள் அனைவரும் ஒரு நூலினை இவ்விலக்கத்தின் மூலம் இனங்காண முடியும்.



எழுத்தாளர்கள் தமது படைப்புக்களை அச்சிடு முன் தேசிய நூலகத்திற்கு விண்ணப்பித்து ISBN இலக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இவ்விலக்கத்தை நூலில் இடம் பெறச் செய்வதன் மூலம் அந்நூலினைச் சர்வதேச ரீதியில் இனங்காணச் செய்தல் சாத்தியமாகும்.

ஜனாப் ஜெமீல் அவர்கள் மிகவும் சிரமப்பட்டுத் தயாரித்துள்ள இந்நூற்பட்டியல் இஸ்லாமிய இலக்கியத் துறையில் ஈடுபட்டுள்ளோருக்கும், ஏனைய ஆய்வாளர்களுக்கும் இன்றியமையாததொரு சாதனமாகும். மேலும் வருங்காலச் சந்ததியினருக்கு இப்பட்டியல் அரியதொரு முதுசமாகும். அவர்தம் அறிவுத் தேட்டத்திற்குத் துணையாகும் பேரேடாகும்.

இந்நூற்பட்டியல் ஆண்டு வரிசையில் தரப்பட்டுள்ளது. இதேபோல் ஆசிரிய வரிசை, பொருள் வரிசை என்ற முறையிலும் வருங்காலத்தில் ஜனாப் ஜெமீல் அவர்கள் இப்பட்டியலை வழங்குவார்களாயின் மிகவும் பிரயோசனமாயிருக்கும். இதற்குக் கணிசமான அவகாசம் வேண்டுமாயிருக்கும். எனவே இப்பணிக்கு இலங்கை நூலகச் சங்கப் பாடநெறியில் பயிலும் மாணவர்களின் உதவியைப் பெறுதல் நலமாயிருக்கும்.

மற்றும், 1970ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட நூல்களுக்கான விவரண அட்டைகளும் தம்மால் சேகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறும் ஜனாப் ஜெமீல் அவர்கள் மீது அவற்றையும் நூலுருவாக்கும் பளுவானதொரு கடமை சார்ந்துள்ளது. இவ்வகையில் அவர்கள் தொடர்ந்து அயராது உழைப்பார்களென்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

ஜனாப் ஜெமீல் அவர்களின் இப்படைப்பு இலங்கை நூலகவியற்றுறையில் பாராட்டுக்குரியதொரு சாதனையாகும். இதனை அறிவுலகம் வரவேற்று ஆதரிக்குமென்பதில் ஐயமில்லை.

ஜனாப் ஜெமீல் அவர்கள் இத்தகைய இலக்கியப் பணியில் தொடர்ந்து இயங்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

கொழும்பு. **எஸ்.எம்.கமால்தீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 1

# நூல் தேட்டம்

*1950*ஆம் ஆண்டிலிருந்து *1969*ஆம் ஆண்டு வரையான இரு தசாப்த காலத்துள் இலங்கை முஸ்லிம்களால் வெளியிடப்பட்ட நூல்களின் விபரங்களை உள்ளடக்கியதே இந்நூலாகும். அடுத்து வரும் இரு அத்தியாயங்களும் ஆண்டு வரிசையில் இவற்றினை நிரல்படுத்துகின்றன.

இஸ்லாமிய இலக்கியத் துறைக்கு இந்நூற்றாண்டில் ஆகக்கூடிய தொண்டாற்றியுள்ள பேராசிரியர் கலாநிதி கலாசூரி அல்லாமா அல்ஹாஜ் ம.முஹம்மது உவைஸ் அவர்கள் அடிக்கடி எமது அமைச்சுக்கு வரும் போதெல்லாம், இலக்கிய முதுசங்களை அடுத்தடுத்த தலைமுறையினருக்கு விட்டுச் செல்வதைப் பற்றிக் கலந்துரையாடுவார். அவர் பல்கலைக்கழக பிரவேச நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற வேளையில் இஸ்லாமிய இலக்கியத்தைப் பற்றி எதுவும் அறியாதிருந்ததைப் பற்றியும், பிற்காலத்தில் அத்துறையில் ஆழ்ந்த ஆய்வில் ஈடுபட்டு, இஸ்லாமிய இலக்கியங்கள் ஈராயிரத்துக்கு மேல் இயற்றப்பட்ட மாபெரும் விடயத்தை வெளிக் கொணர்ந்ததைப் பற்றியும் பிரஸ்தாபிப்பார். இக்கலந்துரையாடல்களே, என்னுள்ளே பல காலம் புதையுண்டுக் கிடந்த ஓர் எண்ணத்துக்கு வடிவம் கொடுத்தன.

மிக நீண்ட காலமாக என்னிடம் ஒரு பழக்கம் இருந்து வருகிறது. ஏதாவதொரு நூல் என் கைவசம் கிடைத்தவுடன், அதனை வாசிப்பதற்கு முன்பாகவே அதற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரண அட்டையைத் (BIBLIOGRAPHY CARD) தயாரித்தலே அதுவாகும். காலக்கிரமத்தில் அவை நூற்றுக் கணக்கில் சேர்ந்துவிட்டன. ஒருமுறை அவ்வட்டவணைகளை ஒழுங் குபடுத்தித் தருமாறு அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி யின் தற்போதைய தலைவரும்; கடந்த கால் நூற்றாண்டு காலத்துள் பலமுறை என்னோடிணைந்து நற்பணியாற்றிய வருமான மருதமுனையைச் சேர்ந்த ஏ.ஆர்.ஏ. அஸீஸ் அவர்களிடம் ஒப்படைத்தேன். அவர் அதனைச் செவ் வனே நிறைவேற்றித் தந்தமையினால், இன்று அவற்றை வைத்து நூல் எழுதுவது மிக இலகுவாகின்றது.

இலங்கையில் வெளிவந்துள்ள நூல்கள் பற்றிய விப ரங்களைப் பெறுவதில் பல இடர்ப்பாடுகள் ஏற்படுகின் றன. இவற்றுள் சில நூல்கள் எனது கைவசம் உள்ள காரணத்தினால், அவை தொடர்பான தகவல்களை மிக இலகுவாகப் பதிய முடிந்தது. ஏனையவற்றைப் பற்றிய விபரங்களை அரசாங்க ஆவணக் காப்பகம் (ARCHIVES), அரும் பொருட்சாலையின் நூலகம்; தேசிய நூலக சேவை கள் சபை; பேராதனைப் பல்கலைக் கழக நூலகம் போன்ற இடங்களிலேயே பெறுதல் வேண்டும். இத்தேடலுக்கு நேரம், அவகாசம், பொறுமை என்பன மிக அவசியம். துரதிருஷ்டவசமாக முன்னைய இரண்டும் எனக்கில்லை. ஒரு மாதத்தில் ஓர் அரை நாளையாவது அதற்கென ஒதுக்கக்கூடிய நிலை எனக்கில்லை.

அக்குறைபாட்டினை நிவர்த்தி செய்பவர்கள் எனது மனைவி சித்தி ஆரிபா; மகன் அல்ஹாஜ் நஸீல் எம்.ஜெமீல் ஆகியோராவர். 1966இல் நாம் விவாகம் முடித்த காலத்திலிருந்து, எனது கட்டுரைகளைச் சொல்வ தெழுதல், தட்டச்சு வசதியில்லாத வேளைகளில் இறுதிப்ப டியெடுத்தல்; பல்வேறு நூல்களிலிருந்து தேவையான குறிப்புகளைப் பெற்றுத்தரல் என்பனவற்றில் எனது மனைவி உதவி வருகிறார். இவ்விருவருமே பல நாட் கணக்கில் முக்கியமாகக் கொழும்பு ஆவணக் காப்பகத்தில்



தேடுதல்களில் ஈடுபட்டு, அவ்வாறு தேடிப் பெற்றவற்றை அட்டைகளில் பதிவுகளாக்கித் தந்தனர். அதனாற்றான் அவற்றினை நிரல்படுத்தி, இக்கட்டுரைத் தொகுதியை எழுதுவது எனக்கு இலகுவாயிற்று.

இத்தேடுதலில் எனது நெருங்கிய உறவுப் பிள்ளைக ளான எம்.ஐ.எம்.சித்தீக், எம்.இசட்.ஷாஹிட் றிஷாட், செல்வி இப்திகார் பானு முஸ்தபா; ஏ.எச்.எம்.ஸியாத், செல்வி ஷபானா ஜுனைதீன் ஆகியோரும் உதவினர்.

பழம் நூல்களை அல்லது அவை பற்றிய விபரங்க ளைத் தேடிப் பெறுதல் சிரமமான காரியமாகும். ஆங்கிலே யர் ஆட்சிக் காலத்து அவை தொடர்பான ஆவணப் பதிவுகளில் நூல்கள் பற்றிய விபரங்கள் யாவும் ஆங்கில மொழியில் பதியப்பட்டுள்ளன. அதனால் சில வேளைக ளில் ஒரு நூலின் சரியான பெயர் என்ன என்பதை அறிவதே சிரமமான காரியமாகிவிடும். உதாரணமாக, அக்கரைப் பற்று கருங்கொடித்தீவு ஏ.பி. முஹம்மது யூஸுப் ஆலிம் சாஹிப் வெளியிட்ட தமிழ் நூலொன்று JUDGEMENT OF MUSLIMS எனப் பதியப்பட்டுள்ளது. இதன் உண்மையான தமிழ்ப் பெயரென்ன? அதனை அறிவதற்கு அந்நூலையே தேடிப் பெறுதல் வேண்டும். அதற்குப் போதிய நேர அவகாசம் வேண்டும். இச்சிறிய விடயத்திற்கு இத்தனை நாளா என அலுப்புத் தட்டும் வேளைகளும் உண்டு. ஆனால் கடைசியாக நூலைத் தேடிப்பிடித்து அதன் பெயர் 'முஸ்லிம்களின் நீதிமுறைகள்' என அறியும் போது ஏற்ப டும் மனத்திருப்தி அலாதியானதாகும். இவ்வாறான சந் தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படும்.

அத்துடன், எமக்குக் கிடைக்கப் பெறும் பதிவு இடாப்புக்கள் பல்வேறு விதமான தகவல்களைக் கொண் டிருக்கும். நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், அரசாங்க ஆவணங்கள் போன்ற பல்லாயிரக்கணக்கான பதிவுகளுள் எமக்குத் தேவையானவற்றைத் தேடிப் பெறுதலும்; அவசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமாயின் அந்நூலையே தேடி எடுத்தலும் பாரியதொரு பணியாகும். எனினும் வருங்காலச் சந்ததியினருக்கு இத்து றையிலான ஈடுபாட்டினை ஏற்படுத்தவும், ஆய்வினை இலகுவாக்கவும் உதவக்கூடிய பணியாக இது மேற்கொள் ளப்படுகின்றது.

தற்போது நூல் வெளியீட்டுத் துறையில் ஈடுபட்டிருப் போருக்கான ஆலோசனையொன்றை இவ்விடத்திற் கூறு வது பொருத்தமெனக் கருதுகிறேன். தம்மால் வெளியிடப் படும் புத்தகங்களைப் பற்றிய விபரங்கள் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமென ஒவ்வொரு எழுத்தாளனும் விரும்புவது இயல்பே. அதற்காகத்தான் அச்சகத்தினர் தாம் வெளியிடும் நூல்கள் ஒவ்வொன்றினதும் ஐந்து பிரதிகளை அரசாங்க ஆவணக் காப்பகத்துக்கு அனுப்ப வேண்டுமெ னச் சட்டமுண்டு. எனினும் எல்லா அச்சகத்தினரும் இத னைக் கடைப்பிடிக்கின்றார்களா என்பது சந்தேகமே. எனவே நூலாசிரியர்களே தமது வெளியீடுகளின் பிரதி களை ஆவணக் காப்பகம்; அரும்பொருட்சாலை, தேசிய நூலக சேவைகள் சபை; பல்கலைக் கழக நூலகங்கள், கொழும்பு பொது நூலகம் போன்ற இடங்களுக்கு அனுப் புதல் அவை என்றும் பாதுகாப்பாயிருக்க உதவும்.

கடந்த வருடம் வெளிவந்த 'சுவடி ஆற்றுப்படை முதலாம் பாகம்', *1850-1949* காலப் பரப்பிலான ஒரு நூற்றாண்டு காலத் தகவல்களைத் தன்னகத்தே கொண்டுள் ளது.

*1950-1969* காலப் பகுதியின் தகவல்களை இந்நூல் தருகின்றது.

*1970-79, 1980-89, 1990-1995* ஆகிய தசாப்தங்களின் விபரங்களைச் சேகரிப்பதில் தற்போது ஈடுபட்டுள்ளோம். அவற்றினையும் ஒரு நூலாக வருங்காலத்தில் வெளியிடும் எண்ணமுண்டு.



எனது சமீப கால ஆக்க இலக்கிய முயற்சிகளில் உறுதுணையாகவும் உந்து சக்தியாகவும் இருப்பவர்கள் இருவர். அவர்களுள் ஒருவர் எனது ஆசான் கன்சுல் உலூம் அல்ஹாஜ் எம்.எம்.எம்.மஹறூப். கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் விரிவுரையாளராக வாழ்வைத் தொடங்கி, முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராக ஓய்வு பெற்றவர். அறிஞர், சர்வ தேச தரத்திலான கட்டுரையாளர். அடுத்தவர் அவரது ஆசான் கன்சுல் உலூம் அல்ஹாஜ் எஸ்.எம்.கமால்தீன். இவரும் கொழும்பு ஸாஹிறாவில் உத்தியோக வாழ்வை ஆரம்பித்து, பின்னர் நூலகத் துறையில் பாண்டித்தியம் பெற்று கொழும்பு பொது நூலகத்தில் பிரதி நூலகராயும், தேசிய நூலக சேவைகள் சபையில் உதவிப் பணிப்பாளரா யுமிருந்து, இன்று இஸ்லாமிய நிலையத்தின் கௌரவ பணிப்பாளராகக் கடமையாற்றும் ஓர் ஆய்வாளர், அறி ஞர். கமால்தீன் அவர்கள் கலாநிதி அல்ஹாஜ் ரீ.பி.ஜாயா வின் மாணவரும், எ.எம்.எ.அஸீஸ் அதிபராயிருந்த காலத்து விரிவுரையாளருமாவார். எனவே, கொழும்பு ஸாஹிறாவின் சிறப்புமிக்க வாழையடி வாழை வரலாற் றுப் பாரம்பரிய மரபினை இது எடுத்துக் காட்டுகிறது எனக் கொள்வது பொருத்தமுடையதல்லவா!

இந்நூலின் மூலப் பிரதியை மிகவும் நேர்த்தியாகத் தட்டச்சுச் செய்தோர் இருவர். அவர்களுள் ஒருவர் செல்வி. நபீலா அலி ஆவார். சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்தில் மூதூர்த் தொகுதியின் பிரதிநிதியாயி ருந்த மர்ஹூம் ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கரின் பேத்தி. மிக வும் புத்திசாலியான நபீலாவுக்குச் சிறந்த எதிர்கால முண்டு. அடுத்தவர் பூகொடை குமாரிமுல்லை செல்வி. எம்.என். சம்சுர் றிப்கா ஆவார். இருவரது நல்வாழ்வுக்கும் அல்லாஹ் அருள்புரிவானாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 2

# 1950 - 1959

இலங்கையில் முஸ்லிம் ஒருவரால் எழுதப்பட்டு நூல் வடிவில் வெளிவந்த முதலாவது நூல் பேருவளை செய்கு முஸ்தபா வலியுல்லாஹ்வின் ''மீஸான் மாலை'' எனத் தெரிய வருகிறது. இது 1868இல் பிரசுரமாகியுள்ளது. இதனைத் தொடர்ந்து எமக்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் 1949ஆம் ஆண்டு வரையான சுமார் ஒரு நூற்றாண்டு காலத்துள் முஸ்லிம்களினால் எழுதப்பட்ட 198 நூல்கள் வெளிவந்துள்ளன.

முஸ்லிம்களினால் இதுவரை வெளியிடப்பட்ட இஸ்லாமிய இலக்கியங்களான இவை பல மொழிகளிலும் வெளிவந்துள்ளமை சிறப்பம்சமாகும். தமிழ், அறபு, சிங்களம், அறபுத் தமிழ், ஆங்கிலம், மலாய், மலையாளம் ஆகிய மொழிகளில் இந்நூல்கள் வெளிவந்துள்ளன. ஆரம்பகால நூல்கள் செய்யுள் வடிவில் அமைந்திருந்தாலும் காலப்போக்கில் உரைநடை மேலோங்க ஆரம்பித்து நிலை பெற்றுவிட்டது.

1950ஆம் ஆண்டிலிருந்து 1959 வரையான ஒரு தசாப்த காலத்துள் இஸ்லாமிய இலக்கியங்களும் முஸ்லிம்களின் ஏனைய நூல்களும் முன்னரைப் போன்று பல மொழிகளிலும் வெளிவந்துள்ளதைக் காணலாம். தமிழ், அறபு, சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அவை வெளிவந்துள்ளதோடு, சில நூல்கள் பாதி தமிழிலும் பாதி அறபிலும் ஏனைய சில தமிழும் ஆங்கிலமும் கலந்தும், ஓரிரண்டு நூல்கள், தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளை உள்ளடக்கியதாயும் உள்ளன.



இன்று தலைசிறந்த கதைஞர், கவிஞர், கட்டுரையாளர் ஆக விளங்கும் பலரது முதலாவது நூல் 1950 தசாப்தத்திலேயே வெளிவந்துள்ளதைக் காணலாம். அவர்களுள் மரணித்தவர்கள் தவிர ஏனைய பலர் இன்றுவரை தொடர்ச்சியாக எழுத்துத் துறையிலும் நூல் வெளிக் கொணர்வதிலும் ஈடுபட்டு வருவதையும் காணலாம்.

மவ்லானா மவ்லவி முஹம்மது உமர் ஹஸரத், பேராசிரியர் அல்லாமா ம.மு.உவைஸ், எஸ்.எம்.கமால்தீன், அ.ஸ.அப்துஸ் ஸமது, சுபைர் இளங்கீரன், எம்.ஸி.எம். ஸுபைர், மவ்லவி பாஸில், யு.எம்.தாஸின், ஏ.ஸீ.ஏ. வதூத், ஏ.ஐ.எல். மரிக்கார், ஏ.ஆர்.எம்.றூஹுல் ஹக், எம்.ஏ.அப்பாஸ், முஹம்மது அப்துல்லா லெப்பை, ஓ.அப்துல் மஜீத், ரீ.எம்.பீர் முஹம்மத் ஆகியோரது முதலாவது நூல்கள் இக்கால கட்டத்தில் வெளிவந்துள்ளன.

அல்ஹாஜ் எஸ்.எம்.ஹனிபா அவர்களால் நிறுவப்பட்ட கல்ஹின்னை தமிழ் மன்றம் இத்தசாப்தத்திலேயே பிரசுரத்துறையில் பிரவேசித்துள்ளது. அதன் முதலாவது நூல் 1953ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளிவந்தது. பேராசிரியர் அல்லாமா உவைஸ் தனது முதுமாணிப் பட்டத்திற்குச் சமர்ப்பித்த ஆய்வே கல்ஹின்னைத் தமிழ் மன்றத்தின் முதல் நூலாக ''தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு'' என ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து இன்றுவரை கல்ஹின்னை தமிழ்மன்றம் 76 நூல்களை வெளியிட்டுள்ளமை ஒரு சாதனையாகும்.

முஸ்லிம் மாணவருக்கான பாட நூல்களும் இக்காலப் பரப்பில் வெளிவந்துள்ளன. கொழும்பு சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தினால் முஸ்லிம் பாடசாலைகளில் உபயோகிப்பதற்கென ''முஸ்லிம் பாலர் வாசகம்'' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எஸ்.பி.சாமிநாதன், ஏ.எல்.எம். இஸ்மாயில் ஆகியோரை இணையாசிரியராகக் கொண்டு எழுதப்பட்ட முஸ்லிம் பாலர் வாசகம் கீழ்ப்பிரிவு, பாலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பிரிவு, 2,3,4,5 ஆகிய வகுப்புகளின் உபயோகத்துக் காக வெளியிடப்பட்டுள்ளது.

அதேபோன்று இஸ்லாமிய இலக்கியத்தை மாணவ ருக்கு அறிமுகம் செய்வான் வேண்டி அக்கரைப்பற்று பிறைப் பண்ணையினால் அ.ஸ.அப்துஸ் ஸமது அவர்களி னால் ''இலக்கியப் பொய்கை'' நூலுருவில் வந்துள்ளது. வளர்மொழி வாசகம் எனும் நூலும் வெளிவந்துள்ளதைக் காண்கிறோம்.

இவ்வாறு 1950-59 காலப்பரப்பில் வெளிவந்த தமிழ் நூல்கள் வருமாறு:

(நூல்களின் வரிசை எண் இதற்கு முன்னர் வெளியா கிய 'சுவடி ஆற்றுப்படை - முதலாம் பாகம்' நூலிற் திரட்டப்பட்டுள்ளனவற்றின் தொடர்ச்சியாகத் தரப்பட் டுள்ளது. முதலாவது நூலாசிரியரின் பெயர்; அடுத்து முறையே நூலின் பெயர்; வெளிவந்த இடம்; வெளியீட்டா ளர்; அச்சகம்; ஆண்டு; மொத்தப் பக்கங்கள்; விலை என்பனவற்றைக் குறிக்கும். ஆயினும் எல்லா நூல்களுக் கும் இத்தகைய விபரங்களைப் பெறுதல் கஷ்டமாகும்.)

199. எஸ்.பி.சாமிநாதன் + ஏ.எல்.எம். இஸ்மாயில்
முஸ்லிம் பாலர் வாசகம் - கீழ்ப்பிரிவு
கொழும்பு / சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்,
1950.5.5
52 45 சதம்
மீள்பிரசுரம்: 1952.5.14; 1953.12.7

200. எஸ்.பி.சாமிநாதன் + ஏ.எல்.எம். இஸ்மாயில்
முஸ்லிம் பாலர் வாசகம் - மேற்பிரிவு
கொழும்பு / சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்
1950.5.25
56 45 சதம்
மீள்பிரசுரம்: 1952.6.9; 1953.12.16



201. எஸ்.பி.சாமிநாதன் + ஏ.எல்.எம்.இஸ்மாயில்
முஸ்லிம் பாவலர் வாசகம் - இரண்டாம் வாசகம்
கொழும்பு / சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்
1950.9.4
74 60 சதம்
மீள் பிரசுரம்: 1952.9.30; 1954.4.30

202. எஸ்.பி.சாமிநாதன் + ஏ.எல்.எம்.இஸ்மாயில்
முஸ்லிம் பாலர் வாசகம் - மூன்றாம் வாசகம்
கொழும்பு / சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்
1950.12.4
86 85 சதம்
மீள் பிரசுரம்: 1952.7.21; 1953.7.1; 1957.10.2

203. சுபைர் இளங்கீரன்
பைத்தியக்காரி
சென்னை / சூரி பிரசுரம்
1950

204. எஸ்.பி.சாமிநாதன் + ஏ.எல்.எம். இஸ்மாயில்
முஸ்லிம் பாலர் வாசகம் - நாலாம் வாசகம்
கொழும்பு / சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்
1951
90 85 சதம்
மீள் பிரசுரம்: 1953.8.8

205. எஸ்.பி.சாமிநாதன் + ஏ.எல்.எம். இஸ்மாயில்
முஸ்லிம் பாலர் வாசகம் - ஐந்தாம் வாசகம்
கொழும்பு / சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்
1951.2.13
94 90 சதம்
மீள் பிரசுரம்: 1953.8.28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

206. எம்.முஹம்மது ஹுஸைன்
நபிகள் நாயக சரித்திரச் சுருக்கம்
யாழ்ப்பாணம்
1951.6.23
48 60 சதம்

207. சுபைர் இளங்கீரன்
மரணக்குழி
நாகர்கோயில், தமிழ்நாடு / நாஞ்சில் வெளியீடு
1951

208. சுபைர் இளங்கீரன்
காதல் உலகிலே
துறையூர், தமிழ்நாடு / எரிமலைப் பதிப்பகம்
1951

209. சுபைர் இளங்கீரன்
கலாராணி
துறையூர், தமிழ்நாடு / எரிமலைப் பதிப்பகம்
1951

210. சுபைர் இளங்கீரன்
ஒரே அணைப்பு
துறையூர், தமிழ்நாடு / எரிமலைப் பதிப்பகம்
1951

211. சுபைர் இளங்கீரன்
மீண்டும் வந்தாள்
நாகர்கோயில், தமிழ்நாடு / நாஞ்சில் வெளியீடு
1951

212. சுபைர் இளங்கீரன்
பொற்குகை
நாகர்கோயில், தமிழ்நாடு / நாஞ்சில் வெளியீடு
1951



213. மவ்லானா மவ்லவி முஹம்மது உமர் ஹஸரத்
இறைவனுக்கு இணையில்லை
சுத்த சத்திய இஸ்லாமிய இயக்கம்
ஹெட்டிவத்தை / தர்ஹாநகர்
1952.11.12

214. ம.மு.உவைஸ்
இலங்கைப் பொருளாதார முறை
கொழும்பு / அரச மொழித் திணைக்களம்
1952
260
(சிங்களத்திலிருந்து மொழி பெயர்ப்பு)

215. சுபைர் இளங்கீரன்
பட்டினித் தோட்டம்
சென்னை / சக்தி வெளியீடு
1952

216. சுபைர் இளங்கீரன்
அழகு ரோஜா
சென்னை / சக்தி வெளியீடு
1952

217. சுபைர் இளங்கீரன்
வண்ணக்குமரி
துறையூர், தமிழ்நாடு / ஜெகதா பிரசுரம்
1952

218. சுபைர் இளங்கீரன்
மாதுளா
துறையூர், தமிழ்நாடு / ஜெகதா பிரசுரம்
1952



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

219. எம்.ஏ.அப்பாஸ்
கள்ளத்தோணி
கொழும்பு / நேரு பிரஸ்
1953.6.21
161 ரூ.1.50

220. எம்.எம்.ஏ. ஆலிம் சாஹிப்
அருமைநபி அவதாரம் அமிர்த ரஞ்சிதம்
மட்டக்களப்பு / சென்.செபஸ்தியன் பிரஸ்
1953 செப்டம்பர்
18 50 சதம்

221. எம்.முஹம்மது அப்துல்லா லெப்பை
திருநபி புகழ் கீதம்
யாழ்ப்பாணம், வண்ணார்ப்பண்ணை
1953.11.21
8

222. எம்.ஏ.அப்பாஸ்
இவளைப்பார்
கொழும்பு / மோகன் அண்ட் கம்பெனி
1953.12.14
82 ரூ.1/-

223. மவ்லானா மவ்லவி முஹம்மது உமர் ஹஸரத்
சித்தமருள் நீக்கும் சுத்த சத்திய சூரியன்
சுத்த சத்திய இஸ்லாமிய இயக்கம்
தர்ஹாநகர்
1953
68 25 சதம்

224. சுபைர் இளங்கீரன்
ஆணும் பெண்ணும்
துறையூர், தமிழ்நாடு / கலைச்சோலை நிலையம்
1953



225. சுபைர் இளங்கீரன்
காதலன்
துறையூர், தமிழ்நாடு / ஜனக்குரல் பதிப்பகம்
1953

226. சுபைர் இளங்கீரன்
நீதிபதி
துறையூர், தமிழ்நாடு / கலைச்சோலை நிலையம்
1953

227. பி.எம்.ஓ. லெப்பை
அர்க்கான் மாலை
கொழும்பு / இஸ்லாம் மித்திரன் பிரஸ்
1954.4.15
20 இலவசம்

228. எம்.ஏ.ஹமீத் லெப்பை ஆலிம்
நூருள் முபீன்
மட்டக்களப்பு
1954.5.13
5 இலவசம்

229. ஏ.மொஹிதீன் பாவா
வளர் மொழி வாசகம்
யாழ்ப்பாணம்
1954.10.30
20 25 சதம்

230. எம்.எம்.உவைஸ் + எஸ்.வை.இஸ்ஸதீன்
இஸ்லாம் என்றால் என்ன? (முதற் பாகம்)
கொழும்பு / இஸ்ஸதீன் அறக்கட்டளை
1954.11.11
16 இலவசம்
(இந்நூல் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் உள்ளது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

231. எஸ்.எம். கமால்தீன்
இக்பால் காட்டிய வழி
(ஆங்கில மூலம்: முஹம்மது அலி)
கொழும்பு / ஸாஹிறாக் கல்லூரி இக்பால் சங்கம்
1954
22

232. மவ்லானா மவ்லவி முஹம்மது உமர் ஹஸ்ரத்
நாற்பய நன்னூல்: நபிமொழி நாற்பதும் கருத்தும் விரிவும்
மஹரகம / கபூரியா மத்ரஸா
1954
92

233. மு.முஹம்மது அப்துல்லா லெவ்வை
நல்வழி திருநபிக் கவிதைகள்
யாழ்ப்பாணம்
1954
28

234. காதர் மஸ்தான்
தமிழ் அமுது
கம்பளை / சென். அன்றூஸ் கல்லூரித் தமிழ் மன்றம்
1955.2.15
48 ரூ.1

235. எம்.எம்.பாறிஸ்
வெற்றிமணி
நாவலப்பிட்டி
1955.3.15
4 25 சதம்

236. கே.எம்.செய்யத் சித்தீக்
அகத்தைப் பார்
சிலாபம்
1955.8.11
22 50 சதம்

237. மவ்லானா மவ்லவி முஹம்மது உமர் ஹஸரத்
மறையும் இறையும் மனுக்குலத்துக்குத் தேவை
மஹரகம / கபூரிய்யா நூற் பிரசுரக் கழகம்
1955.10.24
35 50 சதம்

238. எம்.ஐ.முனீர்
இஸ்லாம் விளக்கம்
நீர்கொழும்பு / இஸ்லாமிய இலக்கிய மன்றம்
1955.1.11
54 50 சதம்

239. கே.பீர்பாவா
அஷ்டாங்கயோகம்
கண்டி / மீராம் மக்காம் பள்ளிவாசல்
1955.11.15
36 50 சதம்

240. எஸ்.காதர் ஹஸன்
இஸ்லாமிய உலகியல் போதினி
நீர்கொழும்பு / இஸ்லாமிய சூரிய அச்சகம்
1955.12.1
100 ரூ.1/-

241. சுபைர் இளங்கீரன்
தென்றலும் புயலும்
யாழ்ப்பாணம் / சண்முகநாதன் வெளியீடு
1955

242. சுபைர் இளங்கீரன்
மனிதனைப் பார்
சென்னை / நவ பாரத் பதிப்பகம்
1955



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

243. **சுபைர் இளங்கீரன்**
அழகு ரோஜா
சென்னை / நவ பாரத் பதிப்பகம்
1955

244. **சுபைர் இளங்கீரன்**
எதிர்பார்த்த இரவு
சென்னை / நவ பாரத் பதிப்பகம்
1955

245. **ஹாஜி முஹம்மத் ஹாஜி இப்னு அகமது லெவ்வை**
இல்ஹாருல் முஹ்ஜிஸாத் பீ ஷ லாதி
அஷ்றபீல் மௌஜூதாத்
பதுளை, லுணுகலை
1955
21 50 சதம்

246. **மு.முஹம்மது அப்துல்லா லெவ்வை**
குத்பு நாயகம் பாமாலை
யாழ்ப்பாணம்
1953
09

247. **கே.பீர்பாவா**
ஏகாந்த தீபம்
கண்டி / குருநாதன் அச்சகம்
1955
96

248. **உதுமான் லெவ்வை**
நாஸூக்குமாலை
கொழும்பு
1955
76



249. **எம்.ஸீ.எம்.ஸூபைர்**
மலர்ந்த வாழ்வு
கல்ஹின்னை / தமிழ்மன்றம்
1956 ஜனவரி
46 ரூ.1/-

250. **எம்.கே.எம். மன்ஸூர் மவ்லவி**
நல் உபதேசம்
கொழும்பு
1956.3.26
64 75 சதம்

251. **ஓ.அப்துல் மஜீத்**
நல்ல தாய்
நீர்கொழும்பு / இஸ்லாமிய இலக்கியக் கழகம்
1956.5.5
24 35 சதம்

252. **ஓ.அப்துல் மஜீத்**
உண்மையும் உலமாவும்
நீர்கொழும்பு / அஹமதிய்யா முஸ்லிம் சங்கம்
1956.10.1
82 ரூ.1/-

253. **சுபைர் இளங்கீரன்**
பாரதி கண்ட சமுதாயம்
சென்னை / நவ பாரத் பதிப்பகம்
1956
95

254. **எம்.ஐ.மீரா லெவ்வை**
இஸ்லாமிய சிந்தனை
அட்டாளைச் சேனை / ஹிஸ்புல்லா சபை
1956
72



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

255. எம்.பி.எம். முஹம்மது காசிம்
இஸ்லாமிய தத்துவார்த்தம்
விடத்தல் தீவு, மன்னார்
1956
33

256. ஓ.அப்துல் மஜீத்
தொழுகை அடவு
நீர்கொழும்பு / இஸ்லாமிய இலக்கிய முன்னணி
1956
32

257. மீரான் அஹமது
மஹ்பூப் மனோன்மணிக் கீதம்
அட்டாளைச்சேனை / ஹிஸ்புல்லா சபை
1956
72

258. எம்.எஸ்.எம். ஹனீப்
பரிசுத்த வஃது நேரம் அறிதல்
கொழும்பு
1957.3.15
118 ரூ.1/-

259. ஏ.ஆர்.எம். சஹாப்தீன்
சலவாத்து
மட்டக்களப்பு
1957.3.27
8

260. மவ்லவி பாஸில் யூ.எம்.தாஸின்
சத்தியவாக்கு
(மூலம்: மவ்லானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி)
கொழும்பு / இலங்கை ஜமாஅதே இஸ்லாமி ஆதரவாளர் இயக்கம்
1957.4.23
60 60 சதம்

261. மவ்லவி ஏ.ஆர்.எம். றூஹுல் ஹக்
மறைநிழலில் மனிதன்
கொழும்பு / இலங்கை ஜமாஅதே இஸ்லாமி ஆதரவாளர் இயக்கம்
1957.5.2
40 50 சதம்

262. ஓ.அப்துல் மஜீத்
ஜம்இயதுல் உலமாவும் அஹமதிய்யா ஜமாஅத்தும்
நீர்கொழும்பு
1957.6.3
44 50 சதம்

263. எம்.எம்.எச். இப்றாஹிம்
பணமா குணமா
தர்ஹா நகர்
1957.6.8
79 ரூ.1/-

264. எம்.எம். அபூபக்கர்
நான் ஒரு முஸ்லிம்
மட்டக்களப்பு
1957.8.20
36 50 சதம்

265. எச்.எச்.எஸ்.ஜுமாத்
தப்லீகுல் இஸ்லாம்
கண்டி
1957.9.5
61 ரூ.1/-

266. ஏ.எச்.என்.எம்.இஸ்மாயில்
இல்லறச் சோலையில் கணவன் மனைவி
கொழும்பு
1957.9.26
257 ரூ.3/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

267. ஆர்.ஏ.ஏ.ஹலீம்
ஹயாத்து நபி ஆண்டவர்கள் அற்புதம்
கண்டி
1957.10.1
111 இலவசம்

268. ஹாமீத் லெவ்வை
கலிமா திறவுகோல்
கண்டி
1957.10.1
6

269. எம்.ஷல்தூக்
ஜாமியுல் அஸ்ஹர் பத்வா
நீர்கொழும்பு / இஸ்லாமிய இலக்கியக் கழகம்
1957.12.1
12 இலவசம்

270. சின்னத் தம்பி வித்துவான்
சீறா கீதம்
1957

271. அ.ஸ.அப்துஸ் ஸமது
சீறா இன்பம்
அக்கரைப்பற்று / பிறைப்பண்ணை
1957
119

272. மவ்லானா மவ்லவி முஹம்மது உமர் ஹஸரத்
பிணியும் மருந்தும்
மஹரகம / கபூரிய்யா நூற் பிரசுரக் கழகம்
1957
94 ரூ.1/-



273. ரீ.ஏ.லெவ்வை
வெள்ளத்துப் புயல் புரளிக் காவியம்
மட்டக்களப்பு
1958.1.27
10 10 சதம்

274. கே.எல்.அலியார்
கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் கொஞ்சல் காவியம்
அக்கரைப்பற்று
1958.2.18
16

275. ஏ.ஆர்.உதுமான்
மாணிக்க மலர்
பேருவளை
1958.2.22
12 25 சதம்

276. கே.ஏ.எம். சதக்கத்துல்லா
நன்மை பயக்கும் நற்போதனை
புத்தளம்
1958.3.25
22 50 சதம்

277. ரீ. பீரமுஹம்மத்
எழுச்சி முரசு
கொழும்பு / வாலிபர் முன்னேற்றக் கழகம்
1958.9.1
4. 50 சதம்

278. மீ.மு. முஹம்மது ஷரீபு
முத்திச்சுடர்
கொண்டச்சி, சிலாபத்துறை, மன்னார்
1958.10.10
56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

279. மவ்லவி எஸ்.எம்.முஸ்தபா மௌலானா
கல்லறைக் காவலர்
ஏறாவூர் / அறிவு நூல் நிலையம்
1958.10.12
15 25 சதம்

280. எச்.எல்.றாஸிக்
இஸ்லாமிய இன்னிசை கீதம்
கண்டி
1958.10.23
9 25 சதம்

281. ரீ.சி. வில்வராஜ்
இஸ்லாமிய கீதம்
நிந்தவூர் / ஹாஜி எம்.மேர்ஸா
1958.11.5
5

282. ஏ.எம்.ஏ. காஸிம்
உளவியலும் இஸ்லாமும்
கொழும்பு / ஜமாஅதே இஸ்லாமி பப்ளிஷிங் ஹவுஸ்
1958
68

283. ஏ.ஆர்.எம். ஸகரிய்யா ஆலிம்
அல்ஹஜ் - அதன் வரிசைகளும், விதிவகைகளும்
மதுரை / நூறுல் ஹக் பிரஸ்
1958 அக்டோபர் 15
208 3/-

284. எம்.ஏ.முஸ்தபா
முன்னேற்ற கீதம்
காத்தான்குடி
1959.7.7
10

285. ஈ.எல்.அப்துல் வாஹித்
திருக் கலிமா
படல்கும்புற
1959.7.27

286. ரீ.எம்.பீர்முஹம்மத்
குடி கெடுக்கும் குடி
கொழும்பு
1959.8.22
28 25 சதம்

287. ஐ.எல்.எம். மஷ்ஹூர்
உளமும் கல்வியும்
காலி / அல்பியன் பிரஸ்
1959.10.1
218 ரூ.5/-

288. அ.ஸ.அப்துஸ் ஸமது
இலக்கியப் பொய்கை - தரம் 6
அக்கரைப்பற்று / பிறைப்பண்ணை
1959.10.24
94 ரூ.1/10

289. அ.ஸ.அப்துஸ் ஸமது
இலக்கியப் பொய்கை - தரம் 7 + ஜே.எஸ்.ஸி.
அக்கரைப்பற்று / பிறைப்பண்ணை
1959.10.24
132 ரூ.1/50

290. ஏ.ஆதம் மன்சூர் பாவா
உண்மை உதயகீதம்
சாய்ந்தமருது
1959.11.26
8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

291. ஏ.எம்.எஸ். முபாரக் அஹ்மத்
ஒரு தப்பான நிவாரணம்
நீர்கொழும்பு / இஸ்லாமிய இலக்கியக் கழகம்
1959.12.14
22 25 சதம்

292. அ.ஸ.அப்துஸ் ஸமது
சுலைமான் - பல்கீஸ்
சென்னை / யுனிவர்சல் பப்ளிஷர்ஸ்
1959
120

293. சுபைர் இளங்கீரன்
இலங்கையின் இரு மொழிகள்
சென்னை / லட்சுமி பதிப்பகம்
1959
72

294. சுபைர் இளங்கீரன்
நீதியே நீ கேள்
சென்னை / பாரி நிலையம்
1959

இத்தசாப்தத்தில் அறபு நூலொன்றும் வெளிவந்துள்ளது. அது:

295. எம்.ஐ.நூஹு
அஹ்காமுஷ் ஷாபியா
கொழும்பு
1957.3.20
100 ரூ.1/50



1950-59 காலப் பகுதியில் முஸ்லிம்களால் எழுதப்பட்டு வெளிவந்த ஆங்கில நூல்கள் வருமாறு:

296. ஏ.ஜே.முஹம்மத் (புறக்டர்)
AMY KNEW THE WOMAN'S WAY
மாத்தறை
1950.8.1
12 10 சதம்

297. பேராசிரியர் மவ்லவி அப்துர் ரஹ்மான்
ISLAM AND BUDDHISM
நீர்கொழும்பு / இஸ்லாமிய சூரியன் அச்சகம்
1951.1.25
20 25 சதம்

298. எம்.எம்.உவைஸ்
MUSLIM CONTRIBUTION TO TAMIL LITERATURE
கல்ஹின்னை / தமிழ் மன்றம்
1953 ஆகஸ்ட்
ரூ.2/-
**(கல்ஹின்னைத் தமிழ் மன்றத்தின் முதலாவது வெளியீடு இதுவாகும்.)**

299. கலாநிதி எஸ்.எம்.யூஸுப்
THE LIFE OF MUHAMMED (SAL)
பேராதனை / பல்கலைக்கழக அறபுப் பகுதி
1954.2.6
33 ரூ.1/-

300. ஏ.ஸீ.ஏ.வதூத்
ISLAM AND AHAMADIYYAT
கொழும்பு
1954.4.17
12 இலவசம்

301. ஏ.ஐ.எல்.மரிக்கார்
A MERCY UNTO MANKIND
கொழும்பு
1956.10.18
24 இலவசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

302. எம்.வை.அஹ்மத்
RHATIB-al-HADDAD
கொழும்பு
*1957.9.20*
*22* *75 சதம்*

303. ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ்
A CRITICISM OF MR.RAMANATHAN'S ETHNOLOGY OF THE MOORS OF CEYLON
*(இரண்டாம் பதிப்பு)*
கொழும்பு / சோனகர் இஸ்லாமிய கலாசார நிலையம்
*1957.11.20*
*70*

**அறபு, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளிவந்த நூலொன்றுள்ளது.**

304. மவ்லவி பீ.அப்துல்லா
*ஈஸா நபி மரணிக்கவில்லையா?*
நீர்கொழும்பு / இலங்கை அஹ்மதிய்யா சங்கம்
*1952.11.16*
*84* *50 சதம்*

**இதேபோன்று ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளிவந்துள்ளவை வருமாறு:**

305. A BRIEF REPORT ON THE JINNAH MEMORIAL HALL ACQUISITION COMMITTEE OF THE CENTRAL PROVINCE MUSLIM LEAGUE
கண்டி / எஸ்.கே.முஹம்மது லெவ்வை
*1954.7.31*
*30*

306. எம்.எல்.முஹம்மது நுஃமான்
HISTORY OF THE COLOMBO GRAND MOSQUE
கொழும்பு
*1959.8.27*
*34* இலவசம்



அத்தியாயம் 3

# 1960-1969

1960-69ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட தசாப்தத்துள் இலங்கை முஸ்லிம்களால் எழுதப்பட்ட சுமார் 250 நூல்கள் வெளிவந்துள்ளன. இதனைப் பிரித்துப் பார்க்கும் போது ஓராண்டிற்கு 25 நூல்கள் எனும் ரீதியிலும், அதாவது மாதமொன்றுக்கு இரு பிரசுரங்கள் எனும் ரீதியிலும் அவை வெளிவந்துள்ளன.

முன்னைய தசாப்தங்கள் நூல் வெளியீட்டுத் துறையில் பல சிறப்பம்சங்களைக் கொண்டிருந்தது போன்று, இக்காலப் பகுதியும் சில தனிச்சிறப்புக்களைக் கொண்டுள்ளது. திருக்குர்ஆனின் சிங்கள மொழிபெயர்ப்பு வெளிவந்தமை; இஸ்லாமியப் பாட நூல்களின் பிரசுரம்; தமிழ், சிங்கள, ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவந்தமை; நவீன இலக்கிய வடிவங்களான சிறுகதை, கவிதை என்பனவற்றின் தொகுப்புக்களும், நாவல்களும் வெளிவந்தமை போன்றனவற்றை இக்காலப் பகுதியின் சிறப்பம்சங்களாகக் கொள்ளலாம்.

இதேபோன்று இன்று பிரபல்யம் பெற்று விளங்கும் பலரது முதலாவது நூல் இத்தசாப்தத்திலே வெளிவந்துள்ளதைக் காண்கிறோம். அவர்களுள் சிலர் மரணமடைந்துவிட்டாலும், அவர்களது ஆக்கங்கள் இன்றும் அவர்களது நாமங்களை நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. இதனாற்றான் ஓர் எழுத்தாளன் மரணித்த பின்னரும், அவனது பணியும் பெயரும் நிலைத்திருக்க வேண்டுமானால் அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது எழுத்துக்கள் நூலுருவில் வெளிவந்திருத்தல் மிக அவசியமாகும். பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், விசேட மலர்களிலும் அவன் எவ்வளவு தான் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், விமர்ச னங்கள் எழுதியிருப்பினும் காலக் கிரமத்தில் அவற்றினை ஒன்று சேர்த்துப் பார்ப்பது மிகக் கஷ்டமாகி விடுகின்றது. இலக்கியகாரர் அனைவரும் தாம் வாழும் காலத்திலேயே தமது ஆக்கங்களை நூலுருவில் விட்டுச் செல்வதே அவர்க ளின் பெயர்களை நிலைநிறுத்துவதோடு சமுதாயப் பயனு டையதாயும் இருக்கும். ஓர் எழுத்தாளனின் பிறப்புச் சான்றிதழும், இறப்புச் சான்றிதழும் அவனது நூல்களேயா கும்.

இவ்வாறு இத்தசாப்தத்தில் தமது முதலாவது நூல் வெளிவந்தோரெனப் பின்வருவோரைக் கொள்ளலாம்.

கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் (மாத்தறை, கம்பளை, கொழும்பு)[1]; கலாநிதி எ.எம்.எ.அஸீஸ் (யாழ்ப்பாணம், கொழும்பு); அ.லெ.அப்துல் காதர் லெவ்வை (காத்தான் குடி, பதுளை, குருத்தலாவ); எ.எம்.சமீம் (பதுளை, கொழும்பு); எஸ்.எம்.எ. ஹஸன் (கண்டி); கலாநிதி எம்.ஏ.எம். ஷுக்ரி (மாத்தறை); ஏ.இக்பால் (அக்கரைப் பற்று, தர்காநகர்); ஏ.எம். அபூபக்கர் (சாய்ந்தமருது); புரட்சிக் கமால் எம்.எம்.சாலிஹ் (ஏறாவூர்); ஏ.ஆர்.எம். சலீம் (அக்கரைப்பற்று); மௌலவி எம்.எச்.சலாஹுதீன் (கல்ஹின்னை); எஸ்.ஏ. செய்யித் ஹஸன் மௌலானா (நிந்தவூர்); எம்.எம்.மஹ்ரூப் கரீம் (காத்தான்குடி); கலை வாதி கலீல் (மன்னார்); ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா (வெலிகாமம்); அபூஉபைதா (மாவனல்லை); எம்.எச். எம். ஷம்ஸ் (திக்வல்லை); எம்.ஸி.எம். ஹஸன் (கொழும்பு) எம்.ஏ.அமானுல்லா (சம்மாந்துறை); யூ.எல். எம். குவைலித் (உக்குவளை); ஆஸாத் மௌலானா (பொத்துவில்); எ.எம்.கனி (யாழ்ப்பாணம்); இளம்பிறை

1. அடைப்புக் குறிக்குள் உள்ளவை பிறந்த, வாழ்ந்த இடங்களாகும்.



எம்.ஏ.ரஹ்மான் (தென்னிந்தியா, கொழும்பு); எஸ்.எம். எம்.பஸீல் (கொழும்பு); ஜே.எம்.எம்.அப்துல் காதர் (மருத முனை); என்.எம்.ஹனிபா (கல்ஹின்னை); மீ.அஹ்மத் (சாய்ந்தமருது); எச்.எம்.பி. மொஹிதீன் (கொழும்பு); எம்.ஐ.எல். பக்கீர்த்தம்பி (சம்மாந்துறை); யூ.எல்.தாவூத் (ஏறாவூர்); ஹாபிஸ் எம்.கே.செய்யித் அஹமத் (தென்னிந் தியா, மட்டக்களப்பு); எம்.எஸ்.எம். ஸாலிஹ் - அண்ணல் (கிண்ணியா); எஸ்.எம். அஹ்மத் (கல்முனை); எம்.ஏ.ஸி. ஜெய்லானி ( தென்னிந்தியா, கொழும்பு, கல்முனை)

திருக்குர்ஆனின் சிங்கள மொழி பெயர்ப்பு வெளிவர ஆரம்பித்த காலம் இதுவேயாகும். 1944ஆம் ஆண்டு சேர் ராஸீக் பரீத் அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்ட சோனக இஸ்லாமிய கலாசார நிலையம் இப்பணியினை மேற் கொண்டு தனது இடைவிடா முயற்சியின் மூலம் அத னைப் பூர்த்தி செய்தது. 1955 ஆகஸ்ட் 28ந் திகதி நடை பெற்ற இந்நிலையத்தின் 11வது வருடாந்த மாநாட்டில் திருக்குர்ஆனை சிங்களத்தில் மொழி பெயர்க்க வேண்டு மென ஏ.ஐ.எல்.மரிக்கார் பிரேரித்தார். அப்பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு 1958 நவம்பர் இரண் டாம் திகதி இப்பணி ஆரம்பமானது.

இம்மொழி பெயர்ப்புப் பணியின் முக்கியமானதோர் அம்சம், இம்மொழி பெயர்ப்புக் குழுவின் தலைவராக சிங்கள பௌத்தர் ஒருவர் தன்னலமற்ற மகத்தான சேவை யாற்றியமையாகும். மாத்தறையைச் சேர்ந்த பினோறிஸ் விக்கிரமசிங்ஹ என்பவரே அவராவார். பல்கலைக்கழக சிங்கள அகராதிப் பிரிவில் கடமையாற்றிய பினோரிஸ் விக்கிரமசிங்ஹாவின் சேவையை சோனக இஸ்லாமிய கலாசார நிலையம் வேண்டிய பொழுது, அப்பணியினை முழுமையாக ஏற்றுத் தனது வாழ்நாளின் இறுதிக்காலம் முழுவதையும் குர்ஆன் மொழிபெயர்ப்புப் பணிக்கே அர்ப் பணித்தார்.

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளரா கக் கடமையாற்றிய அமர ஹேவாமத்தும என்பவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா முறையானவர் இவராவார். 1970 ஏப்ரல் 29ஆம் திகதி இறக்கும்வரை பினோரிஸ் விக்கிரமசிங்ஹ இப்பணியில் ஈடுபட்டிருந்தார்.

மொழிபெயர்ப்புக் குழுவில் மவ்லவி எம்.ஏ.சி.ஏ. லாபிர் (இறப்பு: 9 - செப்டெம்பர் - 1979); மவ்லவி டப்ளியூ. எம்.அப்துல் வஹாப் (இறப்பு: 18 - மே 1980) கத்தீப் எம்.ஐ. அப்துல் ஹமீத் ஆகியோரும் பணியாற்றினர். கலாசார நிலையத் தலைவர் சேர் ராஸிக் பரீத், ஏ.ஐ.எல். மரிக்கார், ஏ.எச். மாக்கன் மாக்கார் ஆகியோரின் பங்களிப்பும் மிகக் குறிப்பிடத்தக்கதாகும்.

1958 நவம்பர் 2ஆந் திகதி ஆரம்பித்த பணியின் பெறுபேறாக திருக்குர்ஆன் 1ஆம் ஜுஸ்உவின் சிங்கள மொழி பெயர்ப்பு 1961 அக்டோபர் 5ஆம் திகதி வெளிவந்தது. இதன் முதலாவது பிரதி அப்போது பிரதமராயிருந்த சிறிமாவோ ஆர்.டி. பண்டாரநாயக அவர்களுக்குக் கையளிக்கப்பட்டது. 30 ஜுஸ் உக்களினதும் மொழி பெயர்ப்பு 1972 இல் முற்றுப் பெற்றது. இவை ஒவ்வொரு ஜுஸ்உவாக வெளியிடப்பட்டு, பின்னர் ஜுஸ்உ 1-10 முதலாம் தொகுதியாகவும் (மொத்தப் பக்கங்கள் 608); ஜுஸ்உ 11-20 இரண்டாம் தொகுதியாகவும் (மொ.ப.753); ஜுஸ்உ 21-30 மூன்றாம் தொகுதியாகவும் (மொ.ப.1039) மொத்தப் பக்கங்கள் 2400 ஆக வெளியிடப்பட்டன. இப்பிரசுரப் பணியின் பூர்த்தி விழா 1985 அக்டோபர் 17ஆந் திகதி காலை 9 மணிக்கு கொழும்பு, கோட்டை, சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தில் நடைபெற்றது. அப்போதைய தபால், தந்திப் போக்குவரத்துப் பிரதியமைச்சர் எம்.ஏ.அப்துல் மஜீத் அவர்களினால் 60 சத நினைவு முத்திரையும் அன்று வெளியிடப்பட்டது.

இம்மொழி பெயர்ப்பின் பிறிதொரு முக்கிய அம்சம் இப்பணிக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய ஆதரவும், நிதியுதவியுமாகும். சோனக இஸ்லாமிய கலாசார நிலைய



அறிக்கையின்படி இம்மொழிபெயர்ப்புப் பணிக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு 5,35,281 ரூபாவாகும். இதில் 2,18,850 ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளமை நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியதாகும்.

இவ்வாறு சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்ட பரிசுத்த குர்ஆனின் ஒவ்வொரு ஜுஸ்உவும் (அத்தியாயம்) வெளிவந்த ஆண்டு விபரம் வருமாறு:

307. அல்குர்ஆன் - ஜுஸ்உ 1
1961 அக்டோபர் 5

308. அல்குர்ஆன் - ஜுஸ்உ 2
1962 ஜூன் 2

309. அல்குர்ஆன் - ஜுஸ்உ 3
1962 செப்டம்பர் 5

310. அல்குர்ஆன் - ஜுஸ்உ 4
1962 டிசம்பர் 6

311. அல்குர்ஆன் - ஜுஸ்உ 5
1963 ஏப்ரல் 13

312. அல்குர்ஆன் - ஜுஸ்உ 6
1963 செப்டம்பர் 12

313. அல்குர்ஆன் - ஜுஸ்உ 7
1964 ஜுலை 13

314. அல்குர்ஆன் - ஜுஸ்உ 8
1965 ஜனவரி 4

315. அல்குர்ஆன் - ஜுஸ்உ 9
1965 நவம்பர் 12

316. அல்குர்ஆன் - ஜுஸ்உ 10
1966 ஆகஸ்ட் 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

317. அல்குர்ஆன் - ஜுஸ்உ 11
1967 பெப்ரவரி 26

318. அல்குர்ஆன் - ஜுஸ்உ 12
1967 நவம்பர் 07

319. அல்குர்ஆன் - ஜுஸ்உ 13
1968 அக்டோபர் 5

320. அல்குர்ஆன் - ஜுஸ்உ 14
1969 செப்டம்பர் 13

321. அல்குர்ஆன் - ஜுஸ்உ 15
1970 அக்டோபர் 02

322. அல்குர்ஆன் - ஜுஸ்உ 16
1971 செப்டம்பர் 29

323. அல்குர்ஆன் - ஜுஸ்உ 17
1972 அக்டோபர் 24

324. அல்குர்ஆன் - ஜுஸ்உ 18
1974 மார்ச் 22

325. அல்குர்ஆன் - ஜுஸ்உ 19
1975 ஆகஸ்ட் 12

326. அல்குர்ஆன் - ஜுஸ்உ 20
1976 ஆகஸ்ட் 13

327. அல்குர்ஆன் - ஜுஸ்உ 21
1980 ஜனவரி 29

328. அல்குர்ஆன் - ஜுஸ்உ 22
1981 பெப்ரவரி 12

329. அல்குர்ஆன் - ஜுஸ்உ 23
1982 மார்ச் 1

330. அல்குர்ஆன் - ஜுஸ்உ 24
1982 டிசம்பர் 14



331. அல்குர்ஆன் - ஜுஸ்உ 25
1983 மே 3

332. அல்குர்ஆன் - ஜுஸ்உ 26
1983 செப்டம்பர் 13

333. அல்குர்ஆன் - ஜுஸ்உ 27
1983 டிசம்பர் 23

334. அல்குர்ஆன் - ஜுஸ்உ 28
1984 ஏப்ரல் 30

335. அல்குர்ஆன் - ஜுஸ்உ 29
1984 அக்டோபர் 11

336. அல்குர்ஆன் - ஜுஸ்உ 30
1985 ஜுலை 25

1950-59 காலப் பகுதியில் இஸ்லாமியப் பாடநூல்கள் வெளிவந்தது போன்று, இத்தசாப்தத்திலும் பல பாடநூல்கள் தொடர்ந்தும் வெளிவந்துள்ளன. முஸ்லிம் பாடசாலைகள் தனியாக நிறுவப்பட்டமையும், அப்பாடசாலைகளிலே இஸ்லாம்; இஸ்லாமிய இலக்கியம்; அறபு ஆகிய பாடங்கள் பிரபல்யம் பெற்றமையும் இதற்குரிய காரணமாகும். அவ்வாறான நூல்கள் வருமாறு: இந்நூல்களுட் பல வருடாவருடம் மறுபதிப்புக்களும் செய்யப்பட்டுள்ளன.

337. ஏ.எம்.கனி
இஸ்லாம் மத பாடம் - தரம் 2
யாழ்ப்பாணம்/ கலைவாணி புத்தக நிலையம்
1960 ஜனவரி 15
40 50 சதம்

338. ஏ.எம்.கனி
இஸ்லாம் மத பாடம் - தரம் 3
யாழ்ப்பாணம் / கலைவாணி புத்தக நிலையம்
1960 மார்ச் 31
60 50 சதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

339. ஏ.எம்.கனி
இஸ்லாம் மதபாடம் - தரம் 4
யாழ்ப்பாணம் / கலைவாணி புத்தக நிலையம்
1960 ஜூன் 10
86 70 சதம்

340. ஏ.எம்.கனி
இஸ்லாம் மதபாடம் - தரம் 5
யாழ்ப்பாணம் / கலைவாணி புத்தக நிலையம்
1960 மே 2
108 90 சதம்

341. ஏ.எம்.கனி
இஸ்லாம் மதபாடம் - தரம் 6
யாழ்ப்பாணம் / கலைவாணி புத்தக நிலையம்
1961
130 ரூ.1.75

342. ஓ.எல்.எம். பளீல்
சாந்தி மார்க்கம் - தரம் 2
கொழும்பு
1960 பெப்ரவரி 26
40 75 சதம்

343. ஓ.எல்.எம்.பளீல்
சாந்தி மார்க்கம் - தரம் 3
கொழும்பு
1960 பெப்ரவரி 26
61 90 சதம்

344. ஓ.எல்.எம். பளீல்
சாந்தி மார்க்கம் - ஜீ.ஸீ.ஈ (சா/த)
கொழும்பு
1969
413 ரூ.6.25



345. எம்.ஏ. ஹமீது லெவ்வை ஆலிம்
நூறுல் பலாஹ்
கடுகஸ்தோட்டை
1961 மார்ச் 20
22

346. எம்.ஐ.அப்துல் ஹமீது
இஸ்லாமிய போதினி
கொழும்பு
1961 டிசம்பர் 30
36 75 சதம்

347. அஹதியா பள்ளிக்கூடப் பாடம் - பாகம் 1,2
கொழும்பு / இலங்கை இஸ்லாமிய போதனா சங்கம்
1965 ஜனவரி
88 ரூபா 1/-

348. எம்.ஸி.எம்.ஸுபைர்
சீறாப்புராணம் - பதுறுப்படலம்
பதுளை / மணிக்குரல் பதிப்பகம்
1961 பெப்ரவரி 6
128 ரூபா 2/-

349. எம்.உமர் நெய்னா
சீறாப்புராணம்
யாழ்ப்பாணம் / கலைவாணி புக் டிப்போ
1961 மார்ச் 29
178 2.50

350. ஏ.எம்.ஷெரீப்தீன்
சீறா - பதுறுப்படலம்
அக்கரைப்பற்று / பிறைப்பண்ணை
1961 ஏப்ரல் 25
172 2.50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**351.** **எம்.எம்.உவைஸ்**
